மிகச் சிக்கலான நிலைமை என்னவென்றால், இந்தமாதிரி சடலங்களைக் கொடுக்கிறபோது, அவைகள் குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக கொடுக்கப்படவேண்டும். அதற்கு மருத்துவர்களும் சான்றிதழ்களைக் கொடுக்கவேண்டியதாக இருக்கிறது. அதிலே இருக்கிற சிக்கல்களை தீர்த்து வைப்பதற்காக அமைச்சரவைக் கூட்டத்திலே இதுபற்றி விவாதித்து, அதற்கான முடிவை ஏடுக்க இந்த அரசு காத்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள பெண்களுக்கு முன்னுரிமை வழங்கல்

*3893. டாக்டர் க. காஞ்சனா : மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துவிட்டு நேர்காணலுக்காக காத்திருக்கும் பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே.என். நேரு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

30-6-1989 ஆம் தேதியில், தமிழ் நாட்டிலுள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்களின் செல்லுப்படி பதிவேட்டில் 7,33,483 பெண்கள் நேர்காணலுக்காக காத்திருக்கின்றனர். வேலை வாய்ப்பு அலுவலகங்களுக்கு வேலை அளிப்போரால் அறிவிக்கப்படும் காலி இடங்களுக்கு, பதிவு மூப்பின் அடிப்படையில் பெண் மனுதாரர்கள் பரிந்துரைக்கப்படுகின்றனர். மேலும் பெண்களுக்கென ஒதுக்கப்பட்ட காலியிடங்களுக்கு பெண் மனுதாரர்கள் மட்டுமே பரிந்துரைக்கப்படுகின்றனர். இது தவிர, பொதுவான காலியிடங்களுக்கு ஆண் மனுதாரர்களுடன் பெண்களும் பதிவு மூப்பின் அடிப்படையில் பரிந்துரைக்கப்படுகின்றனர்.

தற்போது நடைமுறையில் உள்ள அரசாணைகளின்படி மாநில அரசு அலுவலகங்களில் ஏற்படும் பணி காலியிடங்களுக்கு வேலைவாய்ப்பு அலுவலகங்களின் மூலம் பரிந்துரைக்கப்படுவதற்கு பெண்களில் விதவைகளுக்கு மட்டும் முன்னுரிமை வழங்கப்படுகிறது.

1990 மார்ச் 29]

டாக்டர் க. காஞ்சனா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துவிட்டு 10 ஆண்டுகள் 12 ஆண்டுகள் என்று காத்துக் கொண்டிருக்கிறவர்கள் இருக்கிறார்கள். வேலைவாய்ப்பு அலுவலகங்களை அணுகி விவரம் கேட்கின்றபோது, இப்படி ஒரு கார்டே பதிவு செய்யப்படவில்லை என்றும், பல்வேறுதரப்பட்ட நிர்தாட்சண்யமானபதில்கள் அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றன வயதை மாற்றி, இனத்தை மாற்றி, நாளை மாற்றி, ஆளையே மாற்றி, இடைத்தரகர்களை வளமாக வாழவைத்துக்கொண்டு, இந்த நாட்டில் மிகப் பெரிய ஊழல் கிடங்காக இருக்கின்ற வேலை வாய்ப்பு அலுவலகங்களை நம்பியிருக்கின்ற பெண்களுடைய நிலைமை இலவுகாத்த கிளியாக இருக்கிறது. இந்த நிலையை சற்றேனும் மாற்றியமைக்கும் வகையில் அனைத்துத் தரப்புப் பெண்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்பட்டு ஒரு வேலைவாய்ப்பு என்றால் அதிலே கட்டாயமாக இத்தனை பெண்களை நேர் காணலுக்கு அழைக்கவேண்டும் என்று ஒரு இலக்கு நிர்ணயிக்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

10-20 மணி

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெண்களுக்காக ஒவ்வொரு ஆண்டும் கூடுதலாக வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து பணி யில் அமர்த்தப்பட்டிருக்கின்றனர். 1984 ஆம் ஆண்டு 11,585 பெண்களும், 1985 ஆம் ஆண்டு 8,806 பெண்களும், 1986-87-இல் எல்லாம் 8000, என்று இருந்ததை இன்றைக்கு 1988-89 —லே 13,880 பெண்கள் இதுவரை பணியிலே அமர்த்தப்பட்டிருக் கிறார்கள். இங்கே சொல்லியதைப் போல மாண்புமிகு முதல்வ ரவர்கள் காலையிலே மிக விளக்கமாக பெண்களுக்காக அரசுத் துறையிலே பல்வேறு இடங்களை ஒதுக்கித் தருவதாகச் சொல்லி யிருக்கிறார்கள். நிச்சயமாக அரசு இதைக் கடைப்பிடிக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், உறுப்பின ரவர்கள் வேலை வாய்ப்பு அலுவலகங்களில் தவறுகள் எல்லாம் நடப்பதாக இங்கே சொன்னார்கள். குறிப்பாக எடுத்துச் சொல்வார்களேயானால் நாங்கள் நிச்சயமாக நடவடிக்கை எடுப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் க. காஞ்சனா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. வேலை வாய்ப்பிற்கான நேர்காணல் அனுப்பப் படும் பொழுது ஒரு வேதனையான விகிதாச்சாரம் கடைப் பிடிக்கப்படுகிறது. 50 காலி இடங்களுக்கு நேர் காணல் அனுப்பப் படுகிறது. என்று சொன்னால், 1,000 பேர்கள் அழைக்கப்படு கின்றார்கள். 1 : 20 என்கின்ற விகிதாச்சாரத்தில். 'இன்டர் வியூவிற்கு' வருகின்றவர்கள் வேலை கிடைக்கும் என்று நம்பிக்கை யோடு காத்திருப்பவர்கள் ஏமாற்றம் அடைவது என்பது எத் தனை துன்பமானது என்பதை அதனை அனுபவிப்பவர்களுக்கு

மட்டும்தான் தெரியும். முன்பு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது ' Review Committee ' என்ற ஒரு பரிசீலனைக் கமிட்டி ' to look exclusively into the working pattern of the Employment Exchanges ' சட்டமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய ஒரு பரிசீலனைக் குழு முன்பு இருந்தது. அவர்கள் அலுவலகத்திற்குச் சென்று ' at random ' சில கார்டுகளை எடுத்து நிலைமையை அறிந்து, விவரமறிந்துகொண்டு நடவடிக்கை எடுக்கக் கூடிய வாய்ப்பு இருந்தது. பல்லாற்றானும் பணியாற்றக் கூடிய அந்த பரிசீலனைக் குழு மீண்டும் அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே அவர்கள் சொன்னது போன்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களைக் கலந்து கொண்டு, நிச்சயமாக எம்.எல்.ஏ.க்கள் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்படும். மேலும் வேலைவாய்ப்புத் துறையிலே 1 : 20 என்ற அளவிலே அனுப்பிக் கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். 25 இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்திருக்கின்றார்கள். மற்ற பணிகளுக்கு எல்லாம் ஒரு பணி காலியிடம் என்றால் 20 பேர்களை அனுப்புவதும், ஆசிரியர் பணி என்றால் ஒரு காலியிடத்தில் 15 பேர்களை அனுப்புவது என்று நடைமுறையில் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து 30 வயது முடிகின்ற நிலையிலே இருக்கின்றவர்களுக்கு எல்லாம் அந்தந்த ஆண்டே வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்படுமா என்று சென்ற கூட்டத் தொடரின்போது இந்த மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் கேட்ட கேள்விக்கு அப்போது இந்தத் துறையை நிர்வகித்து வந்த அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம் அவர்கள் முன்னுரிமை வழங்கப்படும் என்று அறிவித்தார். தற்போது அந்த அறிவிப்பு அரசு ஆணையாக பிறப்பிக்கப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த முறை மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்த கருத்தை மையமாக வைத்து 3 மாத காலத்திற்கு 'டெம்பரரியாக' தற்காலிகமாக அரசுத் துறையிலே இடம் காலியாக இருக்குமானால் அதற்கு அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து அழைக்கப்பட வேண்டுமென்று சொல்லி, எழுத்தர், தட்டச்சர், ஆகியவர்களுக்கு அந்த வகையில் சலுகைகள் வழங்கத்தக்க வகையில் ஏற்கெனவே முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.